**COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE,**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**

26.06.2025

O.S. No. 65/2022

P.W.1 **திரு.சேகரன்**

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் தரப்பில்) -**

வா.சா.ஆ. 1 ஒப்பந்தம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் பாபு பத்திர அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. ஒப்பந்த்தில் எழுதியுள்ள சொத்தின் எல்கை விவரங்கள் தொியுமா என்றால் தொியாது. ஒப்பந்தத்தில் எழுதியுள்ள சரத்துகள் எனக்கு தொியுமா என்றால் தொியும். ஒப்பந்தத்தில் ஒப்பந்தத்திற்கான கால அவகாசம் 6 மாதம் என எழுதப்பட்டள்ளது என்று தொியுமா என்றால் தொியும். மொத்த கிரய தொகை எவ்வளவு என்றால் ஒரு சென்ட்டுக்கு ரூபாய் 2,60,000/- என பேசி 5 சென்ட் 198 சதுர லிங்ஸ் மனை கிரயம் பெறுவதாக எழுதப்பட்டது. நான் இந்த ஒப்பந்தத்தை செய்யும் போது என்னுடன் வேறு யார் எத்தனை ஒப்பந்தங்கள் போட்டார்கள் என்றால் நான் தனியாக தான் ஒப்பந்தம் செய்தேன். வா.சா.ஆ. 1 கிரய ஒப்பந்தம் செய்யும்போது அதற்கான மனை பிாிவு அனுமதி இருந்ததா என்றால் இல்லை, ஆனால் பஞ்சாயத்து தலைவரிடம் ஒப்புதல் பெற்று சாலைகளுக்கு இடமும் கொடுத்திருந்தார். பஞ்சாயத்து தலைவர் ஒப்புதல் சம்பந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா சொத்திற்கு இன்றைய தேதி வரையில்

மனை பிரிவுக்கு உரிய அனுமதி கிடையாது என்றால் சரிதான். 2020 ஜூன் மாதம் ஜெயசந்திரன் என்பவருக்கு பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார். அதை வைத்து தாவா சொத்திற்கு அனுமதி உள்ளது என நம்புகிறேன். 19.04.2018 லிருந்து இன்று தேதி வரையில் முன்பணத் தொகை கொடுத்தது தவிர வேறு எந்த தொகையும் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வேறு ஒரு நபருக்கு கிரய ஒப்பந்தம் செய்து கொடுத்திருப்பதால், எனக்கு கிரய ஒப்பந்தபடி கிரய ஆவணம் செய்து கொடுக்குமாறு கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யும் வரையில் பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கறிஞர் அறிவிப்போ, வேறு வழக்கோ, தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு நான் செய்யாததால் இந்த வழக்கை நான் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. முதன் முதலில் பிரதிவாதிகள் தான் இந்த ஒப்பந்தத்தின் படி கொடுக்கப்பட்ட முன்பணத் தொகையை திரும்பி பெற்றுகொள்ளுமாறு எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். 2019 ல் தமிழ்நாடு அரசால் தாவா சொத்து உட்பட மலைசார்ந்த சொத்துக்களுக்கு தொடர்பாக ஒரு அரசாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் வா.சா.ஆ. 1 ஒப்பந்தப்படி நான் நடந்து கொள்ளததாலும், பாக்கி தொகையை கொடுப்பதற்கு நான் தயாராக இல்லாததாலும், நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கு மூலமே கிடையாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் 01.12.2021 க்கு முன்பாக பிரதிவாதிகளின் அலுவலகத்தில் வைத்து பார்த்தேன். நான் சொல்லியது போல பிரதிவாதிகளை

அவ்வாறு பார்க்கவில்லை என்றாலும் முன் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானது என்றாலும் சரியல்ல.